OS. 07/2021

நாள். 12.06.2024.

**பி.சா. 1 –** சுந்தர்ராஜன் த/பெ. பூச்சி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாதிகள் ராக்கம்மாள், மாரியம்மாள் என்னுடைய சகோதரிகள். வாதிகள் மொத்தம் 5 இலக்க சொத்துக்களுக்கு வழக்கு போட்டிருக்கிறார்கள். இந்த வழக்கு சொத்துக்கள் ஆதியில் என் தகப்பனாரின் தகப்பனார் சின்னான் அவர்களுக்கு பாத்தியமாக இருந்தன. சின்னான் என்பவருக்கு என் தகப்பனார் பூச்சி, இருளன் மற்றும் சித்திரவேல் ஆகியோர் வாரிசுகள். பூச்சி, இருளன் மற்றும் சித்திரவேல் ஆகியோர்கள் குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று சொன்னால் கொஞ்சம் சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டார்கள், சில சொத்துக்கள் கூட்டுப்பட்டாவில் இருக்கிறது. பாகம் பிரித்துக் கொண்ட சொத்துக்களுக்கு முன்பு என் அப்பா மற்றும் அவருடைய சகோதரர்கள் பெயரில் கூட்டுப்பட்டா இருந்தது என்று சொன்னால் எனக்கு நினைவு தெரிந்து பாகம் பிரித்த சொத்துக்களுக்கு என் அப்பா மற்றும் சித்தப்பாக்கள் இருளன், சித்திரவேல் ஆகியோர்கள் பெயரில் கூட்டுப்பட்டா இருந்தது. வழக்கு 5 இலக்க சொத்துக்கள் எந்த எந்த இடத்தில் இருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். வழக்கு 5 இலக்க சொத்துக்களில் 5 வது இலக்க சொத்து மட்டும் என் சித்தப்பா சித்திரவேலுக்கு பாத்தியப்பட்டது என்றும், மற்ற 4 இலக்க சொத்துக்கள் என் தகப்பனார் மற்றும் என் சித்தப்பாக்களுக்கு சொத்தமானது என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். 5 வது இலக்க சொத்து என் சித்தப்பா சித்திரவேலின் கிரயச் சொத்து கிடையாது, அது பூர்வீகச் சொத்து. UDR பட்டாவின்போது அந்த சொத்துக்கு அவர் பெயரை எழுதிச் சென்றுவிட்டார்கள். என் சித்தப்பா சித்திரவேல் எனக்கோ, என் பிள்ளைகளுக்கோ 5 வது இலக்க சொத்து சம்மந்தமாக கிரயப்பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. பட்டாவை என் பெயரில் மாற்றிக்கொள்ள ஒரு வெள்ளைப்பேப்பரில் அவர் எனக்கு 30.03.2012 ல் எழுதிக்கொடுத்தார். அந்த பேப்பர் தற்போது என்னிடம் இல்லை, அதை கிராம நிர்வாக அலுவலரிடம் கொடுத்துவிட்டேன். பட்டா மாறுதல் உத்தரவு எதுவும் நான் வைத்திருக்கவில்லை. பட்டா மாறுதல் என்

பெயருக்கு 27.02.2019 அன்று மாறியது. என் சித்தப்பா சித்திரவேல் 2015 ல் இறந்துவிட்டார். என் சித்தப்பா இறந்த 5 ஆண்டுகளுக்கு பின்பு பட்டா மாறுதலுக்கு முன்பாக என் சித்தப்பா சித்திரவேலின் வாரிசுகளுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. பட்டாவை என் பெயரில் மாற்றிக்கொள்ள ஒரு வெள்ளைப்பேப்பரில் என் சித்தப்பா சித்திரவேல் எனக்கு 30.03.2012 ல் எழுதிக்கொடுத்தார் என்றும், அந்த பேப்பரை கிராம நிர்வாக அலுவலரிடம் கொடுத்தேன் என்றும் நான் என்னுடைய எதிர்வழக்குரையிலும், என்னுடைய முதன்மை விசாரணை சாட்சியத்திலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களில் சேராத சர்வே எண்.459/2 ஏ சொத்தினை நானும், வாதிகளும் மற்றும் எங்கள் தாயாரும் சேர்ந்து ஒரு கார்த்திக் குமார் என்பவருக்கு 18.08.2005 அன்று கிரையம் செய்து கொடுத்ததற்கான ஆவணத்தின் சான்றிட்ட நகலை வா.சா.ஆ.3 ஆக நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்து என் தகப்பனார் பூச்சிக்கு பாத்தியமானது என்றும், அவருடைய காலத்திற்கு பிறகு பொதுவாக அனுபவித்து வருகிறோம் என்று சொல்லியுள்ளோம் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் அந்த கிரையச் சொத்துக்கு கிழக்கில் சின்னான் மகன் சித்திரவேல் புஞ்சை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் அந்த கிரையச் சொத்துக்கு தெற்கில் சின்னான் மகன் இருளன் புஞ்சை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 கிரைய ஆவணம் ஏற்படுவதற்கு முன்பாக சர்வே எண்.459/2 ஏ, 494/2 ஏ 1 ஆகிய சொத்துக்களுக்கு என் அப்பா பெயரில் கம்ப்யூட்டர் பட்டா இருந்தது, என்னிடம் காட்டப்படுவது அந்த பட்டாவின் நகல் தான். அந்த பட்டா நகல் **வா.சா.ஆ.11**. வா.சா.ஆ.11 ஆவணத்தில் உள்ள 494/2 ஏ 1 சொத்துக்கு தற்போது என் மகள் கலையரசி பெயருக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த பட்டா தான் வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள சொத்துதான் வழக்கு 2 வது இலக்கச் சொத்து என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் பூச்சி என் மகள் கலையரசிக்கு வழக்கு 2 வது இலக்கச் சொத்து தொடர்பாக கிரைய ஆவணம் ஏதும் எழுதிக் கொடுக்கவில்லை. 1989 மற்றும் 2005 ல் வாதிகள் எழுதிக் கொடுத்த விடுதலைப்

பத்திரத்தின் அடிப்படையில் முதலில் என் பெயருக்கு மாறியது, பின்பு என் மகளுக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டது. அந்த விடுதலை ஆவணங்கள் பி.சா.ஆ.11 முதல் 13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.11 முதல் 13 ஆவணங்கள் பதிவு செய்யப்படாத ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். எந்த ஆவணங்களின் அடிப்படையில் பட்டா மாறுதல் ஏற்பட்டது என்பது பட்டா மாறுதல் உத்தரவில் இருக்கும் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. நான் அத்தகைய பட்டா மாறுதல் உத்தரவை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த பி.சா.ஆ.11 முதல் 13 ஆவணங்கள் அடிப்படையில் பட்டா மாறுதல் ஏற்படவில்லை என்றும் அதனால் தான் பட்டா மாறுதல் உத்தரவை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் பட்டா மாறுதல் உத்தரவை கிராம நிர்வாக அலுவலர் எனக்கு கொடுக்கவில்லை. 1989 ல் எழுதப்பட்டதாக நான் தாக்கல் செய்துள்ள விடுதலை ஆவணங்கள் அமைந்து இருந்தாலும் அந்த ஆவணத்திற்கு பிறகு 30 ஆண்டுகள் கழித்துதான் என் பெயருக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். 1989 ல் ஏற்பட்டதாக உள்ள பி.சா.ஆ.11 ஆவணம் ஏற்பட்டபோது நான் சென்னையில் இருந்தேன். அந்த ஆவணத்தில் நான் கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணம் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சீனிவாசன் என்பவர் மூலமாக சென்னையில் வைத்து எழுதப்பட்டது. அவ்வாறு எழுதும்போது என்னுடன் ஆவினின் வேலை செய்த ஸ்ரீதர் மற்றும் முருகானந்தம் ஆகியோர் என்னுடன் இருந்தனர். வழக்கறிஞர் சீனிவாசன், நான், ஸ்ரீதர் மற்றும் முருகானந்தம் மற்றும் எழுதிக் கொடுத்தவர்கள் ஆகியோரைத் தவிர அந்த இடத்தில் வேறுயாரும் இல்லை. பி.சா.ஆ.11 ல் பைமியா என்ற நோட்டரி கையெழுத்து போட்டதாக உள்ளது, அவர் யார் என்று எனக்கு தெரியாது, அது வழக்கறிஞர் சீனிவாசனுக்குத்தான் தெரியும். பி.சா.ஆ.11 ல் பைமியா என்ற நோட்டரி கையெழுத்து போட்ட பிறகு வாதிகளிடம் படித்துக்காட்டி அவர்களிடம் கையெழுத்து பெறப்பட்டது. இந்த பைமியா என்பவர் மாநில அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நோட்டரியா என்பதற்கான விவரம் எதுவும் இந்த பி.சா.ஆ.11 ல் உள்ள முத்திரையில் இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நோட்டரி சீல் போடும்போது அவர் எந்த அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நோட்டரி என்ற விவரத்தை குறிப்பிட்டுதான்

நோட்டரி சீல் போடவேண்டும் என்பது சட்டப்படியான விதி என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிகள் தன் முன்னால் கையெழுத்து போட்டதாக பி.சா.ஆ.11 ல் நோட்டரி எழுதியிருக்கவில்லை என்று சொன்னால் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்கள், எனக்கு தெரியாது. பி.சா.ஆ.11 ஆவணத்தில் கையெழுத்து போட்டதாக உள்ள கருணாநிதி என்பவருக்கும், தாவா சொத்துக்களுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.11 ஆவணத்தில் ஆவண தரப்பினர்களின் கையெழுத்துக்கு கீழே சாட்சிகள் கையெழுத்து போடாமல், ஆவண தரப்பினர்களின் கையெழுத்துக்கு மேல் சாட்சிகளின் கையெழுத்து போடப்பட்டுள்ளது என்று சொன்னால் இடம் இல்லை என்பதால் சாட்சிகள் மேலே கையெழுத்து போட்டார்கள். பி.சா.ஆ.11 ஆவணத்தில் கருவூல முத்திரையில் 1988 என்றும், விற்பனையான முத்திரையில் 02.09.1989 என்றும் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.11 மற்றும் 12 ஆவணத்தில் முத்திரைத்தாள் விற்பனையாளரின் கையொப்பத்துக்கு கீழ் தேதி போடப்பட்டிருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.11 மற்றும் 12 ஆவணங்கள் ஒரே நாளில் எழுதப்பட்டதாக உள்ளன என்று சொன்னால் சரிதான். எதற்காக எழுதிக்கொடுக்கிறார்கள் என்று காரணத்தை சொல்லி ராக்கம்மாளும் அவரது கணவர் கருணாநிதியும் தனித்தனியாக இந்த இரண்டு ஆவணங்களையும் ஒரே தேதியில் எழுதிக்கொடுத்தார்கள். இந்த இரண்டு ஆவணங்களிலும் கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்தாக உள்ளது என்று சொன்னால் இதில் ஒரு ஆவணத்தில் தான் இருவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்ததாக உள்ளது. பி.சா.ஆ.11 ல் 1ம் வாதி ராக்கம்மாளோ, அவரது கணவரோ கையெழுத்து செய்யவில்லை என்றும், பி.சா.ஆ 12 ஆவணத்தில் 1ம் வாதியின் கணவர் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றும், இந்த ஆவணங்கள் என்னால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த இரண்டு ஆவணங்களில் மாரியம்மாள் கையெழுத்து போட்டதாக இல்லை என்று சொன்னால் சரிதான். மாரியம்மாளிடம் 2005 ல் கையெழுத்து வாங்கினேன். என்னிடம் காட்டப்படுவது ராக்கம்மாளும், மாரியம்மாளும் சேர்ந்து 2005 ல் எழுதிக் கொடுத்த ஆவணத்தின் ஒளிநகல்தான் என்று சொன்னால் சரிதான். 18.10.2005 தேதியிட்ட ஆவணத்தின் ஒளி நகல் **வா.சா.ஆ.12**. 18.10.2005

அன்று வா.சா.ஆ.3 கார்த்திக்குமார் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தது தொடர்பாக பணம் பெற்றுக்கொண்டதற்காக இந்த வா.சா.ஆ.12 ஆவணத்தை வாதிகள் எழுதிக் கொடுத்தார்கள். இந்த ஆவணத்தின் அசல் ஆவணத்தை தான் **பி.சா.ஆ.13** ஆக என் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.13 ஆவணத்தில் முதல் பக்கத்தில் மேலே ரசீது என்பதற்கு கீழே உள்ள அடிக்கோடும், ரசீது என்பதற்கு முன்பாக உள்ள விடுதலைப் பத்திரம் என்பதற்கு கீழே உள்ள அடிக்கோடும் ஒரே நேர்க்கோட்டில் இல்லாமல் மேலும் கீழுமாக இருக்கின்றன என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.13 ஆவணத்தில் முதல் பக்கத்தில் ஒவ்வொரு வரிகளுக்கும் இடையே உள்ள இடைவெளியும், இரண்டாவது பக்கத்தில் முதல் வரிக்கு கீழே உள்ள வரிகளுக்கான இடைவெளியும் வெவ்வேறாக உள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த ஆவணத்தில் 1989 ல் எழுதப்பட்டதாக சொல்லப்படும் பி.சா.ஆ.11 மற்றும் 12 ஆவணங்கள் பற்றி சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.13 ஆவணமானது ரசீது என தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றும், நான் அதை விடுதலைப் பத்திரம் என இடைச்செறுகலாக சேர்த்து தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.13 ஆவணத்தில் விடுதலைப் பத்திரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இந்த ஆவணம் கட்டாயம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு பதிவு செய்யப்படாதநிலையில் இந்த ஆவணத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்களில் எந்த உரிமையும் ஏற்படாது என்றும் சொன்னால் சரியல்ல, கோர்ட் மூலமாக உத்தரவு போடப்பட்டு அதன் அடிப்படையில் கட்டணம் செலுத்தி இருக்கிறேன். கட்டாயம் பதிவு செய்யப்படவேண்டிய இந்த ஆவணத்திற்கு குறைவு முத்திரை தீர்வைக் கட்டணம் செலுத்தப்பட்டாலும் இந்த ஆவணத்தின் மூலம் வழக்குச் சொத்துக்களில் எந்த உரிமையும் ஏற்படாது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சகோதரிகளான வாதிகளுக்கு நான் செலவு செய்து திருமணம் செய்து வைத்ததாலும், அவர்கள் பி.சா.ஆ.1 1 முதல் 13 வரையிலான விடுதலை ஆவணங்களை எழுதிக் கொடுத்ததாலும், வழக்குச் சொத்துக்களில் வாதிகளுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்று நான் வழக்காடி வருகிறேன் என்று சொன்னால் சரிதான். மேலும் நான் அவர்களுக்கு வேலை வாய்ப்பு சம்மந்தமாகவும் ஏற்பாடு செய்து கொடுத்ததால் வழக்குச்

சொத்துக்களில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொல்கிறேன். 1ம் வாதிக்கு 1986ம் ஆண்டு திருமணத்தின் போது 25 பவுன் தங்கநகை மற்றும் ரூ.5 இலட்சம் மதிப்புள்ள திருமண சீர்வரிசை பொருட்கள் கொடுத்தேன் என்பதற்கும், 2ம் வாதிக்கு 1994ம் ஆண்டு திருமணத்தின் போது 50 பவுன் தங்கநகை மற்றும் ரூ.8 இலட்சம் மதிப்புள்ள திருமண சீர்வரிசை பொருட்கள் கொடுத்தேன் என்பதற்கும் நான் எந்தவித ரசீதுகள் அல்லது எழுத்து மூலமான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் வாதிக்கு அவரது தகப்பனார்தான் செலவு செய்து திருமணம் செய்து கொடுத்தார் என்றும், 2ம் வாதிக்கு 1ம் வாதிதான் பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த வருமாணத்தை கொண்டு திருமணம் செய்து கொடுத்தார் என்றும் நான் வாதிகளுக்கு நான் சொல்லியதுபோல் செலவு செய்து திருமணம் செய்து கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனாருக்கும், அவரது சகோதரர்கள் இருளன் மற்றும் சித்திரவேல் ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையில் வழக்குச் சொத்துக்கள் வாதிகளின் தகப்பனார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லி வாதிகள் வழக்கு போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு தாவா சொத்துக்கள் என் தகப்பானருக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வழக்கு 3ம் இலக்க சொத்தான சர்வே எண்.457/1ஏ 6 சொத்தில் கண்ட 6 சென்ட் இடத்தில் எனது தகப்பனார் பூச்சி மற்றும் தாயார் பந்தானம்மாள் ஆகீயோர்களது சமாதிகள் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். அந்த சமாதியானது சுமார் 6 அடி நீளம் 4 அடி அகலம் இருக்கும். அவர்களுடைய சமாதியை அந்த இடத்தில் கட்டுவதற்கு என் சிறிய தகப்பனார்கள் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை. சமாதி 2015ம் ஆண்டு கட்டப்பட்டது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.9 வரிசை போட்டோக்களை வழக்கிற்காக எடுத்தோம். சமாதி புதிதாக கட்டப்பட்டதுபோல் இந்த புகைப்படங்களில் உள்ளது என்று சொன்னால் வெள்ளை அடித்ததால் அதுபோல் இருக்கிறது. இந்த 6 சென்ட் நிலத்தில் சமாதி இருப்பதால் இந்த சொத்தை சுடுகாடு என்று வகைப்படுத்தவில்லை. இந்த சொத்துக்கு என் பெயரில் பட்டா இருக்கிறது. ஏற்கனவே அடக்கம் செய்த இடத்தில் இந்த வழக்கு போட்ட பிறகு நான் சமாதியைக் கட்டினேன் என்று சொன்னால் சரியல்ல, 2015லேயே கட்டிவிட்டேன். எங்களுடைய சமுதாய வழக்கப்படி இறந்தவர்களை அவர்களுக்கு

சொந்தமான இடத்தில் அடக்கம் செய்ய வேண்டும் என்பதால் என்னுடைய பெற்றோர்களை எங்கள் நிலத்தில் அடக்கம் செய்தோம் என்று சொன்னால் அந்த காலத்தில் இருந்து அப்படி இருந்தது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.8 ல் உள்ள புகைப்படத்தில் உள்ள கட்டுமானம் 2015 ல் கட்டப்பட்டது. பி.சா.ஆ.8 ல் உள்ள கட்டுமானம் 2015 ம் ஆண்டு கட்டப்பட்டது. பி.சா.ஆ.8 புகைப்படம் இவ்வழக்கிற்காக எடுக்கப்பட்டது. தற்போது பி.சா.ஆ.8 ல் உள்ளதுபோல்தான் அந்த கட்டுமானம் இருக்கிறதா என்று கேட்டால் தற்போது கொஞ்சம் உயர்த்தி மேற்கூரை தகரத்தில் போட்டிருக்கிறேன். இதில் உள்ள கோவிலுக்கு மின் இணைப்பு வாங்கவில்லை. ஆறுமுகம் வகையறாவினர் இருளப்பசாமி கோவில் என்று தனியாக கட்டியிருக்கிறார்கள். பி.சா.ஆ.8 ல் உள்ள இருளப்பசாமி கோவில் சர்வே எண்.457/1 ஏ 1 ல் மேற்குப்பக்கம் உள்ளது. பி.சா.ஆ.8 ல் உள்ள கோவில் மேற்படி சர்வே நம்பரில் கட்டப்பட்டுள்ளதால் மேற்படி சொத்தில் பங்கு கொடுக்கமாட்டேன் என்று எதிர்வழக்குரை போட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த கோவிலின் அளவு 11 ¼ அடி X 11 ¼ அடி. சர்வே எண்.457/1 ஏ 1 சொத்து கூட்டுப்பட்டாவில் இருக்கிறது. பி.சா.ஆ.8 ல் உள்ள கோவில் ஆறுமுகம் வகையறாவினரால் கட்டப்பட்டது என்றும், அது சர்வே எண்.457/1 ஏ 1 ல் கிழக்குப்புறம் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த சொத்தில் கோவில் இருக்கிறது, வழக்கிற்கு சான்று வேண்டும் என்று கேட்டு கிராம நிர்வாக அலுவலரிடம் பி.சா.ஆ.4 மற்றும் 5 சான்றிதழ்களை பெற்றேன். இந்த சான்றிதழ்களை கொடுத்த கிராம நிர்வாக அலுவலரின் பெயர் இந்த சான்றிதழ்களில் இல்லை என்று சொன்னால் சரிதான். இவற்றை செல்வம் என்ற கிராம நிர்வாக அலுவலர் கையெழுத்து போட்டுக் கொடுத்தார். இந்த ஆவணங்கள் செல்வம் என்கிற கிராம நிர்வாக அலுவலரால் கொடுக்கப்படவில்லை என்றும், இவை இந்த வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டவை என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் வாதிகள் நேரடியாக வந்து பாகம் கேட்டதாக வழக்குரையில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்குச் சொத்துக்களில் வாதிகளுக்கு உரிய பங்கினை பிரித்துக் கொடுக்காமல் எதிர்வாதம் செய்து வருவதால் வாதிகளுக்கு அதிகபட்ச செலவுத்தொகையுடன் இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. வாதிகளின் வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்று

சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கள் வாதிகள் மற்றும் என்னுடைய கூட்டு அனுபோகத்தில் இருந்து வருவதால் வாதிகள் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் சரியானது என்று சொன்னால் சரியல்ல.

**<u>6 மற்றும் 14 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

(வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்பதாக 6 மற்றும் 14 ஆம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.)